*கவனிக்க.- 24.08.2012 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி III மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1774 - 2012 අගෝස්තු මස 30 වැනි බ්‍රහස්පතින්දා - 2012.08.30

*1774 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 30 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி II - சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சட்டங்கள் | - | பிசுக்கால் மால்சல்மாரின் நியமனங்கள் | - |
| சட்டமுலங்கள் | - | பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - | மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - | நொத்தாரிசுமார் பட்டியல் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | 120 |
| கடனிறுக்க முடியாமைக்கான வழங்குகளின் அறிவித்தல்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


**கவனிக்க.-** இவ்வர்த்தமானியின் பகுதி V இல் 2009 ஆம் ஆண்டின் காலாண்டிற்கான (சனவரி - மாச்சு) புத்தகப் பெயர்ப்பட்டியலொன்று ஆங்கில மொழியில் மட்டும் பிரசுரிக்கப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2012, செத்தெம்பர் மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2012, செத்தெம்பர் மாதம் 07 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**பி. கே. எஸ். ரவீந்திர,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2012 ஆம் ஆண்டு யுன் மாதம் 23 ஆந் திகதி.

# நானாவித அறிவித்தல்கள்

## ஒடுக்குதல் பற்றிய அறிவித்தல் (கொழும்பில் நடைபெறும்) மேல் மாகாணத்தின் மேல் நீதிமன்றத்தில் அதன் குடியியல் நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில்

இல. 351, தளம் 1, ஆர். ஏ. டி மெல் மாவத்தை கொழும்பு 03 என்னும் முகவரியில் அதன் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தையுடைய மெரிட்டைம் லொஜிஸ்டிக்ஸ் கொழும்பு (பிறைவேட்) லிமிட்டெட்டின் [N(PVS) 28975]விடயத்திலும் ;

இல. மே. நீ.
(குடியியல்)
26/2012/சீஓ
தன்மை : ஒடுக்குதல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பாகம் XII இன் கீழும் அதன் நியதிகளின்படியும் நீதிமன்றத்தால் ஒடுக்குதலுக் கான விண்ணப்பமொன்றின் விடயத்திலும் ;

ஷானக நிரங்க விக்ரமசிங்க, இல. 129, நாகஹாவத்த வீதி, தளுகம, களனி.

.............மனுதாரர்

அதன் குடியியல் நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில் மேற்கூறப்பட்ட கம்பனியை (கொழும்பில் நடைபெறும்) (அ) விடயத்திற்கேற்ப மேல் மாகாணத்தின் மேல் நீதிமன்றத்தால் அல்லது விடயத்திற்கேற்ப மேற்படி நீதிமன்றத்தால் ஒடுக்குவதற்கான மனுவொன்று (ஆ) ஷானக நிரங்க விக்ரமசிங்க என்பவரால் 2012, யூன் 14 ஆந் திகதி மேற்கூறப்பட்ட நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப் பட்டுள்ளதெனவும் மேற்படி மனு 2012, ஒற்றோபர் 04 ஆந் திகதி நீதிமன்றத்தின் முன்னிலையில் விசாரிக்கப்படுவதற்குப் பணிக்கப் பட்டுள்ளது எனவும் இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது. மேற்படி மனுவின்மீது கட்டளையொன்று ஆக்கப்படுவதை ஆதரிக்கவோ அல்லது எதிர்க்கவோ விரும்பும் மேற்படி கம்பனியின் எவரேனும் கடன்தருநர் அல்லது உதவுதொகை செலுத்துநர் விசாரணையின்போது அந்நோக்கத்திற்கென நேரிலோ அல்லது தமது சட்டத்தரணி மூலமோ தோற்றலாம். மனுவின் பிரதியொன்றைத் தேவைப்படுத்தும் மேற்படி கம்பனியின் கடன்தருநர் அல்லது உதவுதொகை செலுத்துநர் எவருக்கும் அத்தகைய பிரதி அதற்கென விதித்துரைக்கப்பட்ட கட்டணத்தின் கொடுப்பனவின்மீது கீழே கையொப்பமிட்டுள்ளவரால் கொடுத்துதவப் படும் :

எவ். ஜே. அன்ட் ஜீ. டீ சேரம்,
216, டீ சேரம் பிளேஸ்,
கொழும்பு 10.

**குறிப்பு**.- மேற்படி மனுவின் விசாரணையின்போது தோற்ற உத்தேசிக்கும் ஆளெவரும் தமது எண்ணத்தைப் பற்றிய எழுத்திலான அறிவித்தலை மேற்கூறப்பட்ட எவ். ஜே. அன்ட் ஜீ. டீ சேரம் நிறுவனத்திற்கு சேர்ப்பித்தல் வேண்டும் அல்லது அஞ்சலில் அனுப்புதல் வேண்டும். அத்தகைய அறிவித்தலில் ஆளின் பெயரும் முகவரியும் அல்லது நிறுவனமொன்றெனில் நிறுவனத்தின் பெயரும் முகவரியும் குறிப்பிடப்பட்டு ஆளினால் அல்லது நிறுவனத்தினால் அல்லது அவரது அல்லது அதன் பதிவுசெய்யப்பட்ட சட்டத்தரணியால் (எவருமிருப்பின்) கையொப்பமிடப்பட்டு சேர்ப்பிக்கப்படுதல் வேண்டும் அல்லது அஞ்சலில் அனுப்பப்படு மாயின் 2012, ஒற்றோபர் 03 ஆந் திகதி பிற்பகல் 6.00 மணிக்கு பிந்தாமல் மேற்கூறப்பட்ட நிறுவனத்திற்குக் கிடைக்கக்கூடியதாக போதிய கால அவகாசத்துடன் அஞ்சலில் அனுப்பப்படுதல் வேண்டும்.

எவ். ஜே. அன்ட் ஜீ. டீ சேரம்,
மனுதாரருக்கான சட்டத்தரணி.

8-848

---

## ஒடுக்குதல் பற்றிய அறிவித்தல் (கொழும்பில் நடைபெறும்) மேல் மாகாணத்தின் மேல் நீதிமன்றத்தில் அதன் குடியியல் நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில்

திவுலபிட்டிய, வல்பிட்ட, குடாகம்மானயில் அதன் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தையுடைய கெப்பிட்டல் கொன்சோலிடேடட் லங்கா (பிறைவேற்) லிமிட்டெட்டின் (PV 11438) விடயத்திலும் ;

இல. மே. நீ.
(குடியியல்)
36/2012/சீஓ
தன்மை : ஒடுக்குதல்

அத்துடன்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பாகம் XII இன் கீழும் அதன் நியதிகளின்படியும் நீதிமன்றத்தால் ஒடுக்குதலுக் கான விண்ணப்பமொன்றின் விடயத்திலும் ;

மெக் சப்ளை செயின் சொல்யூசன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட், 141/ 9, வொக்ஷோல் வீதி, கொழும்பு - 02.

.............. மனுதாரர்

அதன் குடியியல் நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில் மேற்கூறப்பட்ட கம்பனியை (கொழும்பில் நடைபெறும்) (அ) விடயத்திற்கேற்ப மேல் மாகாணத்தின் மேல் நீதிமன்றத்தால் அல்லது விடயத்திற்கேற்ப மேற்படி நீதிமன்றத்தால் ஒடுக்குவதற்கான மனுவொன்று (ஆ) மெக் சப்ளை செயின் சொல்யூசன்ஸ் (பிறைவேட்) லிமிடெட்டால் 2012, ஓகத்து 07 ஆந் திகதி மேற்கூறப்பட்ட நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதெனவும் மேற்படி மனு 2012, ஒற்றோபர் 15 ஆந் திகதி நீதிமன்றத்தின் முன்னிலையில் விசாரிக்கப்படுவதற்குப் பணிக்கப் பட்டுள்ளது எனவும் இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது. மேற்படி மனுவின்மீது கட்டளையொன்று ஆக்கப்படுவதை ஆதரிக்கவோ அல்லது எதிர்க்கவோ விரும்பும் மேற்படி கம்பனியின் எவரேனும் கடன்தருநர் அல்லது உதவுதொகை செலுத்துநர் விசாரணையின்போது அந்நோக்கத்திற்கென நேரிலோ அல்லது தமது சட்டத்தரணி மூலமோ

தோற்றலாம். மனுவின் பிரதியொன்றைத் தேவைப்படுத்தும் மேற்படி கம்பனியின் கடன்தருநர் அல்லது உதவுதொகை செலுத்துநர் எவருக்கும் அத்தகைய பிரதி அதற்கென விதித்துரைக்கப்பட்ட கட்டணத்தின் கொடுப்பனவின்மீது கீழே கையொப்பமிட்டுள்ளவரால் கொடுத்துதவப் படும் :

எவ். ஜே. அன்ட் ஜீ. டீ சேரம்,
216, டீ சேரம் பிளேஸ்,
கொழும்பு 10.

**குறிப்பு**.- மேற்படி மனுவின் விசாரணையின்போது தோற்ற உத்தேசிக்கும் ஆளெவரும் தமது எண்ணத்தைப் பற்றிய எழுத்திலான அறிவித்தலை மேற்கூறப்பட்ட எவ். ஜே. அன்ட் ஜீ. டீ சேரம் நிறுவனத்திற்கு சேர்ப்பித்தல் வேண்டும் அல்லது அஞ்சலில் அனுப்புதல் வேண்டும். அத்தகைய அறிவித்தலில் ஆளின் பெயரும் முகவரியும் அல்லது நிறுவனமொன்றில் நிறுவனத்தின் பெயரும் முகவரியும் குறிப்பிடப்பட்டு ஆளினால் அல்லது நிறுவனத்தினால் அல்லது அவரது அல்லது அதன் பதிவுசெய்யப்பட்ட சட்டத்தரணியால் (எவருமிருப்பின்) கையொப்பமிடப்பட்டு சேர்ப்பிக்கப்படுதல் வேண்டும் அல்லது அஞ்சலில் அனுப்பப்படு மாயின் 2012, ஒற்றோபர் 13 ஆந் திகதி பிற்பகல் 1.00 மணிக்கு பிந்தாமல் மேற்கூறப்பட்ட நிறுவனத்திற்குக் கிடைக்கக்கூடியதாக போதிய கால அவகாசத்துடன் அஞ்சலில் அனுப்பப்படுதல் வேண்டும்.

எவ். ஜே. அன்ட் ஜீ. டீ சேரம்,
மனுதாரருக்கான சட்டத்தரணி.

8-896

---

## ஜம்இய்யத்துஸ் ஸஹ்வா அல் கையரிய்யா (ஜஸ்கா) வைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

எம். பீ. பாறூக், பா. உ. ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளையின் 48 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின்கீழ் "ஜம்இய்யத்துஸ் ஸஹ்வா அல் கைரிய்யா (ஜஸ்கா) வைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்'' எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகம் செய்ய எண்ணியுள் ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக் கொண்ட மேற்குறித்த சங்கத்தை கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும் :-

(1) வறியோர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல் ;

(2) முதியவர்கள், ஊனமுற்றோர், அநாதைகள், விதவைகளை இனங்கண்டு அவர்களுக்கு உதவுதல் ; அத்துடன்

(3) சிறுவர்கள், மகளிர் ஆகியோரின் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் அவர்களுக்கு உதவுதல் ;

பிறவும்.

எம். பீ. பாறூக்,
பாராளுமன்ற உறுப்பினர்.

8-919

---

## அக்குறனை ஜாமிஆ றஹ்மானியா அறபுக் கல்லூரியைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

அப்துல் ஹலீம், பா. உ. ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளையின் 48 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின்கீழ் ''ஜாமிஆ ரஹ்மானியா அறபுக் கல்லூரியைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்'' எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகம் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக் கொண்ட மேற்குறித்த கல்லூரியைக் கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும் :-

(1) அக்குறனையில் நிறுவப்பட்டுள்ள ஜாமிஆ ரஹ்மானியா கலாசாலையை நிர்வகித்தல் ;

(2) சிங்களம், தமிழ், ஆங்கிலம், அரபு மற்றும் உருது மொழிகளைக் கற்பித்தல் ;

பிறவும்.

அப்துல் ஹலீம்,
பாராளுமன்ற உறுப்பினர்,
கண்டி மாவட்டம்.

8-920

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.